# பெண்கள் வீட்டிலிருந்து பணிபுரிந்தபோது எதிர்நோக்கிய சவால்கள்: கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியை அடிப்படையாக கொண்ட ஆய்வு

(வடமராட்சி வடக்கு மூன்று கிராம சேவகர் பிரிவுகளை அடிப்படையாக கொண்டது)

**கிருஷாயினி, R., கமலக்குமாரி, க.**

பொருளியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ravikrishkee@gmail.com

*COVID-19 பெருந்தொற்று காரணமாக அனைத்து உலக நாடுகளும் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு பேரழிவை எதிர்கொண்ட பொழுது அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றாக “வீட்டில் இருந்து பணி புரிதல் திட்டம்“ காணப்படுகின்றது. இலங்கையினுடைய வேலை தளங்களுக்குப் பழக்கமற்ற புதிய நடைமுறையின் கீழ் வேலை வாழ்க்கை சமநிலையைப் பேண வேண்டிய நிலையில் கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியில் பெண்கள் வீட்டுத் துறையில் காணப்பட்டனர். கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியில் நாடு முடக்கப்பட்ட வேளை பெண்கள் வீட்டிலிருந்து பணிபுரிதல் மற்றும் குடும்ப பணிகளை மேற்கொள்ளல் என்ற இரண்டு முரண்பட்ட நோக்கங்களுக்கு மத்தியில் பெண்கள் செயற்பட்டுள்ளனர். சேவைத்துறையில் பணிபுரியும் பெண்களுக்கு கொவிட்-19 பெருந்தொற்று காலப்பகுதியில் வீட்டிலிருந்து பணிபுரிதல் (WFH) மற்றும் குடும்ப பொறுப்புக்கள், கடமைகள் மத்தியில் WFH திட்டத்திற்கு அமைவாக செயற்படல் என்பது சவாலானதாகும். இத்திட்டத்தின் கீழ் வினைத்திறனாக பெண்களால் பணிபுரிய முடிந்ததா என்பதனை “சுவட்” (SWOT) ஆய்வு மற்றும் காரணிப்பகுப்பாய்வு மூலம் ஆராய்வதும், பெண்களின் வேலை-வாழ்க்கை சமநிலைக்கான கொள்கை மற்றும் அது தொடர்பான தந்திரோபாயங்கள் தொடர்பான ஆய்வு இதுவரை செய்யப்படவில்லை என்பதே ஆய்வுப் பிரச்சினையாக காணப்படுகின்றது. வீட்டிலிருந்து பணிபுரிதல் திட்டத்தினால் பெண்கள் எதிர்நோக்கிய சவால்களை அதாவது பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை அறிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்ட இந்த ஆய்வு அவற்றால் ஏற்பட்ட விளைவுகளையும் கண்டறிய முயன்றுள்ளது. சேவைத் துறையில் (தனியார் துறை மற்றும் அரசதுறை) பணிபுரிகின்ற 60 பெண்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட J/383,J/384 ,J/385 ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய தொண்டைமானாறு மற்றும் கெருடாவில் பிரதேசங்களை ஆய்வு பிரதேசங்களாகக் கொண்ட ஒரு குறுகிய கால ஆய்வாகும். இவ் ஆய்வுப் பிரதேசத்தில் அதிகளவான பெண்கள் அரசதுறை மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிகின்றார்கள். சுவட் ஆய்வு, விவரணப்பகுப்பாய்வு, இணைவுக் குணகப் பகுப்பாய்வு, காரணி பகுப்பாய்வு போன்றவற்றை பயன்படுத்தி பெற்ற முடிவுகளானவை வீட்டிலிருந்து பணிபுரிதல் திட்டம் சேவைத் துறையில் பணிபுரிகின்ற பெண்களுக்கு பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் போன்ற சவால்களை ஏற்படுத்தி இருந்திருக்கின்றது. ஆனாலும் இன்றைய சூழ்நிலையில் ஊழியப்படைப் பங்குபற்றலில் அதிக பெண்களை உள்ளீர்ப்பதற்கு வீட்டிலிருந்து பணிபுரிதல் திட்டத்தினைப் பரிந்துரைப்பதாக இந்த ஆய்வு அமைகின்றது.*